# கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

# தேயிலை ஆராய்ச்சி சபை

## முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)**
**MANAGEMENT ASSISTANT (NON-TECH)**

**கடமை விபரம்**
நிறுவனத்தின் முகாமைத்துவ வேலைகளுக்கான மேலதிக உதவிகளைச் செய்தல், தொழில்நுட்பவியல் சாராத செயற்பாடுகளுக்கு வசதியேற்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறல்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி, (தமிழ் / சிங்களம்) மற்றும் கணித பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

க.பொ.த. (உ/த)ப் பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது வினாப்பத்திரம் தவிர) சித்தி பெற்றிருத்தல்

**கவனிக்கவும் :** சிங்களம் மற்றும் தமிழில் கணனிப் பயன்பாடுகளில் அறிவு (உ+ம் : word processing spreadsheet) மேலதிகத் தகைமையாகும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் :**
பின்வரும் தகைமைகளைக் கொண்ட தேர்ச்சி பெற்ற, அரைத் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்ற ஆரம்ப நிலை வகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெறுவர்.

**கல்வி :** க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி, (தமிழ் / சிங்களம்) மற்றும் கணித பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**ஏனையவை :** மேற்குறிப்பிடப்பட்ட வகுதியில் நிரந்தரப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**கவனிக்கவும் :** ஏதாவது பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதாவது பதவியொன்றின் நிரந்தர நியமனத்திற்கான நிபந்தனையாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலம் மேற்படி தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது. ஏதாவது பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன் சேவையாற்றியுள்ள தற்காலிக / சமயாசமய சேவைக் காலம் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது.

**சம்பள அளவுத் திட்டம் :** MA 2-1 (2016) ரூபா 27,910 – 10x300 – 7x350 – 12x600 – 12x710 - ரூபா 49,080.00 மாதாந்தம்.

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**தெரிவு செய்யும் வழிமுறை :** எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

**ஏனைய நன்மைகள்:**

i. அனைத்து வசதிகளையுமுடைய வசிப்பிடங்கள்/ விடுதி அறைகள் இருப்பின் வழங்கப்படும் அல்லது இருப்பிடத்திற்கான பதிலீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

ii. நிலையத்தின் மருத்துவத் திட்டத்தின் நடைமுறையிலுள்ள மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

iii. **சேமலாப நிதி :** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி சம்பளத்தின் 10%ஐ ஊழியர் குழாமிற்கான சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படி வேண்டப்படுவதுடன் நிலையமானது 15% (வீதத்தைச்) செலுத்தும். மேலும் நிலையமானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீதத்தையும் பங்களிப்புச் செய்யும்.

iv. தேயிலை ஆராய்ச்சி நிலைய ஊழியர்களுக்கு ஏற்புடைத்தான ஏனைய நன்மைகளும் வழங்கப்படும்.

இப்பதவி நிரந்தரமானது. விண்ணப்பதாரி தொடர்பாக மதிப்பீடொன்றை சமர்ப்பிக்கக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கலாக முழுமையான சுயவிபரங்கள், உரித்தான கல்விசார்ந்த மற்றும் ஏனைய தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகள், பிறப்பத்தாட்சியின் பிரதி, சேவைச் சான்றிதழ்கள், மற்றும் புத்தாக்க திறன்கள் என்பன தொடர்பான முழுமையான விபரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவருடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து google படிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை பதிவேற்றம் செய்யவும். 2024 ஏப்ரல் 16ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் ஆதார ஆவணங்களை கீழே கையொப்பமிட்டவருக்கு தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**